பட்டிருக்கிறது. கூடுமானவரையில் போக்குவரத்து உள்ளே வந்து இடைஞ்சல் ஏற்படாத அளவுக்கு, நகரைச் சுற்றிச் செல்ல சுற்றுச் சாலைகள் ஏற்பட முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் குறிப்புகளில் கல்வி, தொழில், மருத்துவமனை இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். 1991-ஆம் வருஷத்திலே சென்னை நகரச் சுற்றுப் புறத்தில் 48 இலட்சம் பேருக்கும் மேல் இருப்பார்கள் என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயில் இருப்பதைப்போல், பம்பாயில் சுற்றியிருக்கும் பகுதிகளில் இரயில்கள் போவதைப் போல், சென்னையிலும் சென்னையைச் சுற்றிப் பிரயாணம் செய்யக்கூடியதற்கான சிறப்பு அம்சம் இல்லை. இதை அரசாங்கம் வற்புறுத்தி அந்த வசதியைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரயில் விடுவதன் இன்றியமையாமையைப்பற்றி இந்தத் திட்டத்தில் என்ன வகுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்து மனத்தில் கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. விநாயகம் : மேஜைமீது வைத்திருக்கும் அறிக்கையிலிருந்து மவுண்ட் ரோட்டிலே வருகிற போக்குவரத்தை, நெரிசலைக் குறைக்க ஒரு 'ப்ளை ஓவர் பிரிட்ஜ் அட் ஜெமினி' என்று ஒரு திட்டம் இருந்தது. அதன் வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்று முன்பு பதில் சொன்னார்கள். இதில் இந்தத் திட்டம் வரவில்லையே. ஒருவேளை இது சென்னை மாநகராட்சியின் ஆட்சியின் கீழ் போடப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஜெமினிக்குப் பக்கத்திலே நெரிசலைத் தவிர்ப்பதற்காக மேம்பாலம் போட திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே அது வரவில்லையென்றாலும், சென்னை நகரத்தின் வளர்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலே ஹைவேஸ், பெருவழித்துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

செவிலியர் பயிற்சி

* 514 **வினா. திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மருத்தவ மனையை ஒட்டிய சென்னை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பயிற்சிப் படிப்பு ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

1970 மார்ச் 24]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள செவிலியர் கல்லூரியில், ஒவ்வோர் ஆண்டும் செவிலியர் பணியிலிருந்து பத்து பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் பி.எஸ்ஸி. (செவிலியர் பணி) பட்டப் படிப்பு 1967 ஜூலையில் துவக்கப் பட்டது. அப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகளாகும்.

திரு என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு எத்தனை நர்சுகளுக்கு இம்மாதிரி பயிற்சி கொடுக்க வசதிகள் இருக்கின்றன? தற்பொழுது நர்சுகளைத் தேர்ந் தெடுக்கும் முறையைப்பற்றிப் பொதுமக்களிடையே கண்டனத் திற்கு உள்ளாகக்கூடிய முறையாக இருக்கிறது. எனவே, அந்த விதிமுறைகளை மறுபரிசிலனை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கேள்வி செவிலியரின் மேற்பட்டப் படிப்பைப் பொறுத்தது. மேற் பட்டப்படிப்பு, பி.எஸ்ஸி.-க்கு 10 செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். 10 பேர்களுக்குப் பயிற்சியளிக்கத்தான் வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, 10 செவிலியர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு, அந்த பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு தரப்படுகிறது. இப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகள். ஜெனரல் நர்சிங் கோர்ஸ் சான்றிதழுக்கு மூன்றாண்டுக் காலம் என்ற முறையிருக் கிறது. அதில் 35 பேர்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். செவிலியர் தேர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய குறிப்புக்கள் இந்தக் கேள்வியில் அடங்கி வராது. தனியாகக் கேள்விகேட்டால் இப்பொழுது இருக்கும் முறையைப் பற்றியும், கொடுக்க வேண்டிய முறையைப்பற்றியும் சொல்லலாம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவரவர்களே, பயிற்சி பெற்ற செவிலியர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆஸ்பத்திரிகள் நிறுவப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அப்படிப் பட்ட சில இடங்களில் செவிலியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பயிற்சி பெற்றிருக்கும் செவிலியர்களைக் காலியாக இருக்கும் இடங் களில் நியமிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. மருத்துவ மனைகள் வளர வளர பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப் படையிலே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. பலவிடங்களில் புதிய மருத்துவ மனைகள் அதிகமாகும் இடங்களில் புதிய செவிலியர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். அப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களை இந்தக் காலியாக இருக்கும் இடங்களில் நிறுவுவதற்கான முயற்சிகள் மாவட்ட மருத்துவ அதிகாரிகளால் அவ்வப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட செவிலியர் பயிற்சிப் படிப்பு வேறு எந்த மருத்துவக் கல்லூரிகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பதைப் பற்றி வேறு எந்தக் கல்லூரியிலிருந்தாவது எப்பொழுதாவது கோரிக்கை வந்ததா ? இப்படிப்பட்ட நிலையில் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி நிறுவ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செவிலியர் பயிற்சிக்கு, தேவையையொட்டித்தான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்து, பயிற்சி பெற்ற செவிலியர்களே பல பேர் இருக்கிறார்கள் என்ற நிலையில் மேலும் பயிற்சி தருவதற்கான புதிய பள்ளிகளை வைக்கத் திட்டம் இல்லை. இப்பொழுதிருக்கும் நிலையே போதுமானதாகயிருப்பதால் புதிய பள்ளியோ அல்லது கல்லூரியோ வைக்கும் நோக்கம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், மருத்துவ மனைகளிலே இருக்கும் நர்சுகளுக்கு, படுக்கைகளின் விகிதாசாரங்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இதைக்குறைத்து, நர்சுகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மருத்துவமனையைப்பற்றி ஆராய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ' என்று அறியப்படுகிறதே. அந்தக் கருத்தை ஏற்று, பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களை அதிலே ஈடுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒவ்வொரு செவிலியருக்கும் குறைந்த படுக்கை இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே பணியைப்பொறுத்தவரையிலும் நல்ல முறையில் அமையக்கூடும். ஆனால் நிதி வசதிகள் மற்றவைகளைப் பார்த்து, அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க முடியாமல் இருந்து வருகிறது.

மறைந்த திரு. அண்ணாதுரையவர்களின் நூல்கள்

515 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை நூல் வடிவில் வெளியிடுவது அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் அனைத்தையும் தொகுத்து, அச்சடித்து வழங்குவது என்றால் தனிப்பட்டவர்களுக்கு நிதி வசதி